மு.பெ.சத்தியவேல்முருகனார்
மின்னஞ்சல் : editor@dheivathamizh.org

தெய்வமுரசு
ஆன்மீக மாத இதழ்

# தமிழர்தம் பழம்பெரும் பண்டிகைகள்

பண்டிகை என்ற சொல்லைப் பண்டு+கை என பிரிக்கலாம். அதாவது பண்டைய கொள்கை, வழக்கு என்று பொருள். பண்டு தொட்டு வருகின்ற இறை வழிபாடு என தொடர்ந்து வருகின்றது. ஒவ்வொரு பண்டிகையும், ஒவ்வொரு காரணம் பற்றி ஒவ்வொரு தெய்வ மூர்த்தங்கள் (அதி தேவதைகள்) வழிபடப்படுகின்றன. நடைமுறையில் அவை கொண்டாடப்படுகின்றன. ஆனால் அவை கால மாற்றத்தால், அயல் இன அரசர்களால் கொள்கையளவில் மாற்றம் பெற்று இன்று பொருளற்ற பண்டிகையாய், வெறும் பலகாரங்களால் மட்டுமே அடையாளப் படுத்தப்படுகின்றன.

முன்னோர்கள் ஒவ்வொரு பண்டிகையையும் அறிவார்ந்த அடிப்படையால் ஒவ்வொரு காரணம் பற்றி வெவ்வேறு வழிபாட்டு முறைகளுடன், வித விதமான வெவ்வேறு பலகாரங்களுடன் வழிபட்டு வந்தனர். அயல் சமய தாக்கத்தால் இவை முற்றும் மாறி இன்று பல்வேறு பண்டிகைகள் வெறும் பலகாரங்களுடன், துணிமணியுடன், பொருள் புரியாத வெறும் கொண்டாட்டமாக மாறியுள்ளது.

இவற்றை நுணுகி ஆராய்ந்து பண்டைய சங்க வரலாறு, சைவாகமம், பன்னிரு திருமுறைகள், நாலாயிரத் திவ்ய பிரபந்தம், பத்தி இலக்கியங்கள் மற்றும் தமிழர் நெறியான சைவ சித்தாந்தத்தை அடிப்படையாக கொண்டு காரண காரியத்துடன் பண்டிகைகள் இங்கே முறைப்பட வகுத்து அமைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு பண்டிகையும் தத்துவ விளக்கத்துடன் தொடங்கி அதற்குரிய காலம், இடம் ஆகியவற்றின் அதிதேவதைகளை வணங்கும் சிவாகம வழிபாட்டு முறையுடன் வகுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பண்டிகையின் நோக்கமும், செயல் முறையும் உயிரோட்டமாக இருப்பதை அனைவரும் இவற்றை படிக்கும் போதும், செயல்முறையில் உணர்வோட்டமாகவும் உள்ளதை நடைமுறை சுய அனுபவத்தில் கண்டுணரலாம்.

பண்டிகையின் முழுப்பொருளை அறிவார்ந்த அடிப்படையில், குடும்பத்தில் உள்ள அனைவரும் செயல்முறையில் அனுபவிக்கலாம் என்பது நூற்றுக்கு நூறு உண்மை.

இதையே நமது சமயாச்சாரியார்களின் தலைவரான திருஞான சம்பந்தர்

'நுண்ணிறிவால் வழிபாடு செய்வார்க்கு உடையான்'

'அறிவொடு வழிபடும் அடியவர் குழுமிய
செறிதரு கலசையில் வருதரு சிவனே'

– சிவஞான முனிவர்.

அறிவால் அறிந்துன் இருதாள் இறைஞ்சும்
அடியார் இடைஞ்சல் களைவோனே

–அருணகிரிநாதர்.

இவ்வாறு அருளாளர்கள் வாக்கிற்கேற்ப இறைவனை அறிவால் அறிந்து நமது பண்டிகைகளை உணர்வுபூர்வமாக மேற்கொள்ளுவோம்.

# தீபாவளி உள்ளுறை

[தெய்வமுரசு ஆசிரியர் 13–9–2005 முதல் 23–9–2005 வரை 11 நாட்கள் மலேசியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது மலேசியாவின் RTM என்கிற ரேடியோ டெலிவிஷன் மலேசியா என்கிற மலேசியா அரசுக்கு சொந்தமான நிறுவனத்தின் அழைப்பின் பேரில் தீபாவளி பற்றி ஒரு சிறப்புப் பேட்டி அளித்தார். வரும் தீபாவளி கொண்டாட்டத்தில் அதன் பொருள் பற்றி அறிந்து கொள்ள மங்கல தீபம் வாசகர்களுக்கு இப்பேட்டி உதவும் என்பதால் அதன் தொகுப்பு இங்கே அளிக்கப் படுகிறது. ஏற்கெனவே 1–8–2005 ஆம் நாள் ஆசிரியரின் முந்தைய மலேசியப் பயணத்தில் மலேசிய வானொலியில் மகளிர் நிகழ்ச்சியின் பொருட்டு ஆசிரியர் அளித்த பேட்டி 5 முறை மறு ஒலிபரப்பாகியது குறிப்பிடத் தக்கது].

பேட்டியாளர் திருமிகு மனோன்மணி : ஐயா! தங்களை மீண்டும் சந்தித்துப் பேட்டி எடுப்பதில் மிக்க மகிழ்ச்சி. தற்போது மலேசியத் தமிழர்களில் வரும் தீபாவளியின் பரபரப்பு தொடங்கிவிட்டது. இந்தத் தீபாவளி கொண்டாட்டத்தின் அடிப்படையைப் பற்றி சற்று எடுத்துச் சொல்லுங்கள் ஐயா!

தெய்வமுரசு ஆசிரியர் : அம்மா! தங்களை மீண்டும் ஒரு பேட்டிக்காகச் சந்திப்பதில் மெத்த மகிழ்ச்சி தீபாவளிப் பண்டிகை என்பது 200 அல்லது 300 ஆண்டுகளாக தமிழர்களிடையே மிக்க பிரபலம் அமைந்திருப்பது உண்மைதான்.

பே : இது பற்றிக் கூறும்போது இது நரகாசுரனைக் கிருஷ்ணன் கொன்ற நாள் என்றும் அதையே மக்கள் கொண்டாடுகின்றனர் என்றும் கூறுகிறார்களே! இதைப்பற்றி தங்கள் கருத்து என்ன ?

தெ ஆ : ஒருவர் கொல்லப்பட்டதைக் கொண்டாடுவது என்பது நாகரிகம் ஆகாது. அது காந்தியே ஆனாலும் அல்லது கோட்சேவே ஆனாலும் எவர் ஒருவர் சாவிலும் இனிப்பு கொடுத்தும் கொண்டும் கொண்டாடுவது அநாகரிகமான செயலே. இறந்தவன் கெட்டவனே ஆனாலும் அவன் செய்த ஓரிரண்டு நல்ல செயல்களைக் கூறி அவனுக்காக அழுவது உலகியல்பு. அல்லாமல் இப்படியாக இன்னொருவர் வாழக்கூடாது என்று இவன் சாவில் நாம் பெறும் படிப்பினையாக இருக்கட்டும் என்றாவது சொல்வார்களே ஒழிய ஒருவன் மரணத்தில் இனிப்பு உண்டு மகிழ்வது எந்த வகையிலும் ஏற்கத்தக்கதல்ல.

பே : ஆனால் புராணம் இப்படித்தான் சொல்கிறது என்கிறார்களே ?

தெ ஆ : விஷ்ணு புராணத்திலும், தேவி பாகவதத்திலும் இந்தக் கதை கூறப்படுவது என்னவோ உண்மைதான். ஆனால் அங்கே கூட நரகாசுரனின் தாயாகிய பூமாதேவி அவனை மன்னித்தருள் என்றுதான் கேட்டதாகக் கூறப்படுகிறதே ஒழிய (விஷ்ணு புராணம் லிப்கோ பதிப்பு பக்கம் 401) அவன் இறந்ததை இந்த பூமியில் உள்ளவர்கள் கொண்டாட வேண்டும் என்று கேட்டதாக கூறப்படவில்லை. அதுதான் தீபாவளியாகக் கொண்டாடப்படுகிறது என்கிற குறிப்பும் இல்லை.

இன்னும் சொல்லப்போனால் பூமாதேவி திருமாலின் இன்னொரு மனைவி. வராக அவதாரத்தில் திருமாலுக்கும் பூமாதேவிக்கும் பிறந்தவன் நரகாசுரன் என்று விஷ்ணு புராணம் கூறுகிறது. திருமாலோ தேவர்களில் ஒருவர். அவருக்குப் பிறந்தவன் எப்படி அசுரனாவான்? அகலிகையை தொட்டுக் கெட்ட இந்திரனைப் போல இவனும் ஒரு கெட்ட தேவனாகலாமே ஒழிய இவன் அசுரன் ஆவது எப்படி? புராணக் கூற்றில் இதுவே முரண்பாடு.

அதற்கப்புறம் மகனைத் தந்தை கொன்றதும் அவ்வளவு சரியானதாகக் கூற முடியாது. அப்படியே கெட்டதொரு மகனைத் தம் கையாலேயே கொன்ற நீதியின் மிக்க தந்தைதான் திருமால் என்றாலும், கொல்லலாம்! ஆனால் இதைப் பூமியில் உள்ளவர்கள் கொண்டாடுங்கள் என்றா ஒரு தந்தை கூறுவார்? கொல்வது வேறு; அதைக் கொண்டாடுவது வேறல்லவா?

எனவே நரகாசுரனை அவன் தந்தை நாராயணன் கொன்றதைக் கொண்டாடுவதே தீபாவளி என்பது விஷ்ணு புராணத்திற்கும் அறிவிற்கும் உலகியலுக்கும் பொருந்தாமல்

யாரோ வடநாட்டினர் கட்டிவிட்ட புரளி என்பதே உண்மை.



ஏனென்றால் வட இந்தியாவில்தான் இன்று கூட இராவண லீலா என்று இராவணனை எரித்து அவன் மரணம் கொண்டாடப்படுகிறது. இது முற்றிலும் வட இந்திய வழக்கம். தமிழரிடம் இந்த அநாகரிகம் எப்போதுமே படிந்ததில்லை.

பே : ஐயா! விஷ்ணு புராணத்தில் உள்ளதாகத் தாங்கள் கூறியவை உண்மைதான். வானொலியில் கூட ஒரு புராண நாடகம் ஒலி பரப்பினோம். அதில் நரகாசுரனின் தாயான பூமித்தாய் தனக்கும் திருமாலுக்கும் பிறந்த மகனின் சாவுக்கு திருமாலே காரணமாகிவிட்டது பற்றிப் புலம்புவதாகவும், தன் மகனின் குறைகளைப் பொறுத்து மன்னிக்க வேண்டும் என்றும், அவன் சாவை யாரும் கொண்டாடுவது கூடாது என்றும் புலம்பி வேண்டிக் கொண்டதாக வரும். ஆக ஐயா சொன்னது சரிதான்! அப்படியானால் தீபாவளிப் பண்டிகையின் பொருள்தான் என்ன?

தெ ஆ : தீபாவளி என்ற சொல் வடசொல். ஆவளி என்றால் வரிசை. நாமாவளி என்பது நாமங்களின் வரிசை என்பது போல தீபாவளி என்றது தீபங்களின் வரிசையை குறிக்கும். இத் தீப வழிபாடு சிவ விரதங்கள் எட்டில் ஒன்று. இதை அடிக்கடி வாரியார் சுவாமிகள் கூட கூறுவார். தீபாவளியின் பொருட்டு எடுத்த ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் கூட அவர் இப்படித்தான் கூறினார் என்பது நோக்கத்தக்கது. அவர் தீபாவளி என்றால் அது நரகாசுரனின் சாவைக் கொண்டாடுவது என்று ஒரு முறைகூட தப்பித் தவறிக்கூட அவர் சொல்லிக் கேட்டதில்லை. சமய உலகில் வாரியார் வாக்கிற்கு தனி ஒரு மதிப்பு உண்டல்லவா? ஆக தீபாவளி என்பது நரகாசுரன் வதத்துடன் தொடர்புடையது அல்ல என்று ஆதாரத்துடன் ஆன்றோர் வாக்குடனும் காணத் தெளிவாகியது.

பே : அப்படியானால் இந்தப் பண்டிகையின் பொருள் தான் என்ன? விஷ்ணுபுராணம் இதைக் கூறவில்லை என்றால் சிவபுராணங்கள் இதைப் பற்றி ஏதாவது கூறுகின்றனவா?

தெ ஆ : சரியாகக் கேட்டீர்கள்! இது முழுக்க முழுக்க கௌரி நோன்போடு தொடர்புடையது. கௌரி நோன்பு நவராத்திரியோடு தொடர்புடையது. நவராத்திரி புரட்டாசி அமாவாசையிலிருந்து தொடங்கும். அன்றிலிருந்து ஒன்பது நாட்கள் நவராத்திரி கொலு கொண்டாடப்படும். கொலுவில் பலவிதமான பொம்மைகள் வைத்துக் கொண்டாடுவார்கள். அது எதைக் குறித்தது என்றால் அம்பிகையாகிய சிற்சக்தி சிவப்பரம் பொருளிலிருந்து பிரிந்து வந்து இந்த உலகில் பல்வேறு வடிவங்களில் உயிரினங்களைப் படைப்பதைக் குறித்தது. அந்தப் படைப்பை ஒன்பது சக்திகளாக அதாவது மனோன்மணி (நீங்கள் தான் என்று ஆசிரியர் கூற பேட்டியாளர் சிரிக்கிறார்) சர்வ பூததமணி, பலப்ரதமணி, பலவிரகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை, என்கிற ஒன்பது சக்திகளாகப் பிரிந்து ஐம்பெரும் பூதங்களையும், சூரியனையும், சந்திரனையும், உயிர்களின் உடல்களையும் படைக்கிறாள். அதனால்தான் இதை ஒன்பது ராத்திரிகளில் வைத்துக் கொண்டாடினார்கள்.

இதன்பின் அம்பிகை சிவபரம்பொருளிடம் இருந்து பிரிந்த நிலை மாறி சிவபரம் பொருளிடம் சென்று சேர்கிறாள். அதாவது மீண்டும் சிவபரம்பொருளை அடைய நவராத்திரி ஒன்பதாம் நாள் தொட்டு 21 நாட்கள் தவமிருந்து நோற்று மெல்ல மெல்ல சிவ பரம்பொருளை அடைகிறாள். இதைத்தான் அம்பிகை தவமிருந்து இடப்பாகம் பெற்றாள் என்று குறிப்பிட்டார்கள். இதையே கேதார கௌரி விரதம் என்றார்கள். ஆகவேதான் வருடாவருடம் நவராத்திரியின் ஒன்பதாம் நாள் ஆகிய ஆயுத பூசை நாளிலிருந்து 21–ஆம் நாளில் கேதார கௌரி நோன்பும் அதையொட்டி தீபாவளியும் வரும். இதை எல்லாம் எமது இதழான தெய்வமுரசின் இதழ் ஒன்றில் தெளிவாக விவரமாகக் குறிப்பிட்டுள்ளேன். அதன் சுருக்கத்தைத்தான் இங்கே கூறுகிறேன்.

ஐந்தெழுத்தில் சி என்கிற எழுத்து சிவ பெருமானைக் குறித்த எழுத்து. வ என்கிற எழுத்து அம்பிகையாகிய சத்தியைக் குறித்த எழுத்து. உயிர்கள் உள்பட உலகம் அனைத்தும்

பிரளய காலத்தில் சிவனிடம் அடங்கி நிற்கும். அந்த நிலையைக் காட்டும் ஐந்தெழுத்தில் சி என்பது மட்டும் ஏனைய எல்லா எழுத்துக்களையும் உள்ளடக்கி தனியே நிற்கும். இதை நாயோட்டும் மந்திரம் என்பார் திருமூலர். அதாவது நாய் அருகே வந்தால் நாம் சீ! என்று துரத்துகிறோம் அல்லவா? அப்படி ஒரு குறியீடு செய்து அதை நாயோட்டும் மந்திரம் என்பார் திருமூலர். அது ஏனையவற்றை எல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டு நிற்பதால் அதனை எழுத்தை அமுத்தும் எழுத்து என்றும் கூறுவர்.

பிரளய காலத்தில் ஏற்படும் லய நிலையில் அதாவது முற்றொடுக்க நிலையில் வ என்ற எழுத்தாகிய சத்தி எழுத்தும் சி என்ற எழுத்தில் அடங்குவதை அம்பிகை இடப்பாகம் பெற்றாள் என்று சங்கேத மொழியில் கூறினர் ஆன்றோர்.

இறைவன் இந்த உலகை விரிக்க முதலில் சத்தியை தன்னிலிருந்து பிரித்து வெளியாக்குகின்றான். அந்த சத்தி ஒன்பது சத்தியாய் பிரிந்து இந்த உலகைப் படைக்கிறாள். படைப்பின் நோக்கம் முடிந்ததும் சத்தி மீண்டும் சிவத்தில் ஒடுங்கிவிடுகிறாள். அதாவது உலக உற்பத்தியில் சிவ என்று ஆகும் ஐந்தெழுத்து உலக ஒடுக்கத்தில் சி என்று ஒடுங்கிவிடுகிறது.

இந்த உண்மையைப் புறநானூறுகூட கூறுகிறது. பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று; அவ்வுரு தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும் என்பது புறநானூற்றுக் கடவுள் வாழ்த்து வரிகள். அதில் பெண்ணுரு ஒரு திறன் ஆகின்று என்பது சிவ என்னும் ஐந்தெழுத்தைக் கூறுவது. அவ்வுரு தன்னுள் அடக்கி கரக்கினும் கரக்கும் என்பது சி என்னும் ஐந்தெழுத்தைக் குறித்தது. புறநானூற்றிலேயே இவை வருவதைப் பாருங்கள்!

ஆக உலகமெல்லாம் ஒடுங்கும் லய நிலையில் பிரளயத்தில் என்ன ஆகிறது தெரியுமா? அரைப்பக்குவத்தில் அல்லது முக்கால் பக்குவத்தில் உள்ள உயிர்களை இறைவன் தூசுத் தட்டி அப்படியே தன் திருவடியில் சேர்த்து முடிந்த முத்தியைக் கொடுத்து விடுவான். அவர்களுக்குத் தான் பிரளயாகலர் என்று பெயர். பிரளய காலத்தில் இரு மலங்களின் கட்டுக்களில் இருந்து நீக்கப்படுபவர்கள் என்பது அதன் பொருள். அவர்கள் ஏற்கனவே மாயா மலக்கட்டுகளிலிருந்து நீங்கியவர்களாக பக்குவம் ஏறி இருப்பார்கள்.

ஆகவே பிரளயத்தில் பல உயிர்கள் முத்தி அடைகின்றன. அதில் நமது முன்னோர்களில் சிலரும் அடங்கலாம் அல்லவா? அதற்கு வாய்ப்பு உண்டுதானே! எனவே அவர்கள் பெற்ற முத்தியொளிச் சேர்க்கையைக் குறித்தே பல அகல்களில் தீபம் ஏற்றி வரிசையாக வீட்டில் வைத்து அவற்றை வணங்குகின்றோம். அதுதான் தீபாவளி என்று ஆயிற்று. இறந்த முன்னோர்களில் பலர் இறை ஒளியில் கூடுவதைக் கொண்டாடுவது சிறப்புதானே! இதுதான் தீபாவளிக் கொண்டாட்டம் ஆயிற்று. அதனால்தான் கேதார கௌரி விரதத்தின் மறுநாள் அல்லது சில வருடத்தில் அதே நாளில் தீபாவளி நேர அது கொண்டாடப்படுகிறது. அதாவது உலகை விரித்த சத்தி முற்றிலுமாக சிவத்தில் ஒடுங்கிய பின் தீபம் ஏற்றி முன்னோர்கள் பெற்றிருக்கக்கூடிய முத்தி கொண்டாடப்படுகிறது.

பே : ஐயா! இது வரை யாரும் தெரிவிக்காத புதிய செய்தி மிக்க மகிழ்ச்சி ஐயா! அப்படியானால் பட்டாசு வெடிப்பது எதைக் குறிக்கிறது?

தெ ஆ : உயிர்களைக் கடும் பற்றாகப் பற்றிய ஆணவம் சிதைந்து உயிர் முத்தியொளி பெற்றதைக் குறிக்கவே பட்டாசுகள் வெடிக்கப்படுகின்றன.

பே : நல்ல கருத்து ஐயா! புத்தாடை புனைவதன் கருத்து என்ன?

தெ ஆ : சத்தி இடப்பாகம் பெற்று சிவத்தில் ஒடுங்கியது சத்தியும் சிவமும் இரண்டறக் கலந்ததைக் குறிக்கும். இதை சிவ–சத்தி திருமணம் என்பர். திருமணம் என்றால் புத்தாடை புனைவது இயல்புதானே!

பே : இதையொட்டி கங்கா ஸ்நானம் என்கிறார்களே அது பற்றியும் தங்கள் கருத்து என்ன?

தெ ஆ : கங்கையில் மூழ்குவது பிதிர்க்கள் ஆகிய முன்னோர்க்கு செய்யும் கடன் என்பது இன்றும் கண்கூடு. என்றைக்கோ இறந்த நம் முன்னோர்களுக்கு எல்லாம் கங்கையில் ஒரு சேர நீரொழுக்கி (தர்ப்பணம் செய்து) நீர்க்கடன் ஆற்றுவது இன்றைக்கும் நாம் பார்க்கிறோம். அது போல இந்த தீபாவளி நாள் நமது முன்னோர்கள் முத்தி பெற்ற நன்னாள் என்பதால் அன்றைய முழுக்கை அதை நினைவுபடுத்தி கங்கா ஸ்நானம் என்றார்கள். அது மட்டுமல்ல இதற்கு அடிப்படையாக ஆரம்பிக்கும் புரட்டாசி

அமாவாசையை மகா பிரளய அமாவாசை என்று மேற்கூறிய பின்னணியில் சொன்னார்கள். அது மருவி மாளய அமாவாசை என்று ஆயிற்று. இவை எல்லாம் நமது முன்னோர்களுடன் தீபாவளிக்கு உள்ள தொடர்பை வெளிப்படுத்தும். இதுவன்றி நரகாசுரன் வதத்தைக் கொண்டாடுவது என்பது எள்ளளவும் பொருத்தம் இல்லாதது. நம் முன்னோர்கள் முத்தி பெற்றார்கள் என்பதையே தீபாவளியில் இனிப்புகள் உண்டு கொண்டாடுகிறோம்.

பே : மிக அற்புதமான கருத்துக்களைச் சொன்னீர்கள் ஐயா! இது எங்கள் மலேசியத் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஏன் தமிழ்ச் சமுதாயம் அனைத்திற்குமே மிக்க பயனாய் இருக்கும். இன்னும் இதுபற்றி எனக்கு வேறு கேள்விகள் இல்லை. ஆனால் இதுபற்றி மேலும் விளக்கங்கள் இருக்குமானால் அதைக் கூறலாம்.

தெ ஆ : இந்த தீபாவளிப் பண்டிகை தமிழர்களால் முதலில் கார்த்திகை மாதத்தில் கொண்டாடப்பட்டது. அதுவே கார்த்திகை தீபம் என்று இன்றும் நின்று நிலவுகிறது. பின்னர் அது ஐப்பசி மாதத்திற்கு முன் தள்ளப்பட்டது. காரணம் முன்னொரு காலத்தில் தமிழ் வருடம் என்பது சித்திரையில் தொடங்காமல் ஆவணியில் தொடங்குவதாக வைத்துக் கொண்டிருந்தனர் தமிழர். அதாவது சூரியனின் ஆட்சி இடமான சிம்ம ராசியில் சூரியன் புகும் மாதமான ஆவணியிலிருந்து முன்பு வருடம் தொடங்குவதாக அமைத்துக் கொண்டனர் தமிழர். பின்னர் வானியல் அறிவு வளர வளர



சூரியன் உச்சம் பெரும் மேஷ ராசியில் சூரியன் புகும் சித்திரை மாதத்திலிருந்து வருடம் தொடங்குவதாக மாற்றிக் கொண்டார்கள். முதலில் ஆவணியில் வருடம் தொடங்கியபோது அதற்கேற்ப தீபாவளியைக் கார்த்திகை மாதத்தில் அமைத்து கார்த்திகை தீபம் என்று கொண்டாடினர். ஆனால் ஆவணி மாதத்திலிருந்து சித்திரை மாதத்திற்கு வருடத் தொடக்கம் முன் தள்ளப்பட்ட காரணத்தால் ஒரு மாதம் முன்னதாக தீபாவளியை ஐப்பசி மாதத்தில் வைத்தனர் தமிழர். ஆனால் அந்த பழைய வழக்கமான கார்த்திகை தீபத்தையும் விட மனது வராத காரணத்தாலும் அது அண்ணாமலையில் இறைவன் அருட்பெருஞ் சோதியாக வானளாவ எழுந்து நின்ற பொருத்தம் கருதியும் அந்த தீப வரிசையும் தொடர்ந்தது.

ஊர் இரண்டு பட்டால் யாருக்கோ கொண்டாட்டம் என்பார்கள். அதுபோல இரண்டு தீப வரிசைகள் வழக்கில் வந்தவுடன் வட இந்தியர்கள் இதில் புகுந்துக் கொண்டார்கள். கார்த்திகை தீபத்தில் தெற்கே வீடுகளிலெல்லாம் வரிசை வரிசையாக தீபம் ஏற்றிக் கொண்டாடப்படுவது கண்ணுக்கும் கருத்திற்கும் இனிமையான காட்சியாக இருப்பதால் அதைத் தழுவிக் கொண்டு தங்களுக்கு கார்த்திகை வேண்டாம்; அதை தமிழருக்கு விட்டுவிடுவோம்; அதேபோல் ஐப்பசியில் தாம் வைத்துக் கொள்வோம் என்று தழுவிக் கொண்டனர். அதற்கு என்ன காரணம் என்று காட்ட இயலாதவர்கள் நரகாசுர வதம் என்ற தம் அநாகரிகக் கற்பனையை அதில் புகுத்திக் கூறினார்கள்.

அது மட்டுமல்ல; தமிழ் நெறியில் தமிழ் அகத் துறையில் திருமணம் பெண் வீட்டில் நடப்பது தான் மரபு. இங்கே கேதார கௌரி விரதம் என்பது சிவ–சத்தி திருமணம் என்று முன்னர் காரண காரியத்துடன் விளக்கிச் சொன்னோம் இல்லையா? எனவே இத் திருமண நாளன்று மாப்பிள்ளை பெண் வீட்டில் வருகை புரிவதும் வழக்காகி தீபாவளியன்று மாப்பிள்ளைக்கு மவுசு உண்டாயிற்று.

பே : அட தீபாவளியில் மாப்பிள்ளைக்கு மவுசு உண்டான வரலாற்றுக்குக் காரணம் இதுதானா? நல்ல பல கருத்துக்களை நாங்கள் இதுவரை கேளாமல் இருந்த செய்திகளை பொருந்தியவாறு எடுத்துக் கூறியதற்கு என்றென்றும் ஐயாவிற்கு நன்றிகள்!

# தீபாவளி (வீடு பேற்றடைந்த நம்முன்னோர்) வழிபாட்டு முறைமை

**1.0.** முதலில் குளித்துவிட்டு தூய்மையாக பூசை செய்யும் இடத்திற்கு வரவேண்டும். குளிக்குமுன் தூய்மையான நீரை உரிய வாளியில் அல்லது பாத்திரத்தில் நிரப்பிக் கொள்க. அதில் 'ஓம்' என்று எழுதி உள்ளங்கையால் மூடி (இதற்கு பதாகை முத்திரை என்று பெயர்) ஏழுமுறை ஓங்காரத்தை ஓதுக. பின்னர் வழக்கப்படி குளிக்க. பின்னர் இறுதியாக குவளையில் நீரை முகந்து அதனை உள்ளங்கையால் மூடி வரும் பாடலைப் பாடுக:

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதித் திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி அந்தமா மாபாடி
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

பின்னர் குவளை நீரை தலைமேல் ஊற்றிக் குளிக்க. இவ்வாறு பாடி இறையுணர்வோடு தலைமேல் ஊற்றிக் கொள்கிற நீர் அருள் வீழ்ச்சியாக (சத்திநிபாதம்) மாறி நம் உடலைப் பேதித்து அதாவது மாற்றி பூசை செய்வதற்குத் தகுதியாகும் தன்மையைக் கொடுக்கும். இதை சிறப்பு நாளன்றி நாடோறும் கூட கடைப்பிடிக்கலாம். சிறப்பு நாளில் நிச்சயமாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

**1.1.0.** இனி, பூசை செய்யுமிடத்திற்கு வந்து தமிழ்மறை சைவ அனுட்டானத்தைச் சிவதீக்கை பெற்று நாடோறும் செய்கிறவர்கள் அதைச் செய்து கொள்க. அல்லாதவர்கள் வரும் முறைகளைக் கடைப்பிடிக்க.

**1.1.1.** ஒரு பூவை எடுத்து இருதயம், கண்டம், நாக்கின் அடி, புருவ நடு, உச்சித்துளை ஆகிய இடங்களில் தொடுக. பின் வரும் பாடலை ஓதித் தலைமீது சொரிக:

எல்லாக் கலையும் இடைபிங்கலை நடுச்
சொல்லா நடுநாடி ஊடே தொடர்மூலம்
செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்
நல்லோர் திருவடி நண்ணிநிற் பாரே


–திருமந்திரம்

உடன் நெற்றியின் இருபக்கங்களிலும் குட்டிக்கொள்க. குட்டிக்கொண்டு 'என் ஆன்மா இறை திருவருளால் தூய்மை ஆகுக', என்று மீண்டும் மலரைத் தலையில் சொரிக. இது உயிர்த்தூய்மை (ஆன்மசுத்தி) எனப்படும்

**1.1.2.** நமது உடல் ஐம்பூதங்களின் மயக்கம். அதாவது கலவை. மண், புனல், தீ, காற்று, விண் ஆகிய ஐம்பூதங்களும் நமது உடலில் உள்ளன. ஒவ்வொன்றையும் அவ்வவற்றின் பகைப் பூதங்களால் ஒடுக்குவதாகப் பாவிக்க.

மலர் எடுத்து மார்பு, நெற்றி, சிரசு ஆகிய இடங்களில் ஒற்றி, 'எனது உடலில் உள்ள ஐம்பூதங்களும் ஒன்றில் ஒன்றாக இறைதிருவருளால் ஒடுங்குக' என்று தலையுச்சிக்குக் கொண்டு போய் பின்புறம் போடுக. இது பருவுருத் தூய்மை (தூலதேக சுத்தி) எனப்படும்.

**1.1.3.** மீண்டும் மலரை எடுத்து புருவ நடுவில் ஒற்றி, ''எனது உடலில் ஐம்பூதங்களுக்கும் நுண்மையாய் உள்ள ஏனைய முப்பத்தோரு நுண்ணுருக் கூறுகளும் ஒன்றில் ஒன்றாக ஒடுங்குக'' என்று ஓதி மலரை தலைமீது சொரிந்து கொள்க. இது நுண்ணுருத் தூய்மை (சூக்கும தேக சுத்தி). எனப்படும்.



**1.1.4.** அடுத்து உடம்பில் கால் கட்டைவிரல் முதல் தலை உச்சிவரை மலர்களால் தடவி, சிவசத்தியால் உண்டான ஞானத்தீயால் தூலவுடல், நுண்ணுடல் ஆகியவற்றில் படிந்துள்ள மாசுகள் எரிக்கப்பட்டதாகப் பாவித்து,

'ஓம் அண்டம் அடியுறை அழலே எழுக' என்றும்
'ஓம் இறைதிரு கருவியால் உடல்மாசுகள் எரிந்தேகுக'

என்றும் ஓதி மலரை தென்மேற்கு மூலையில் விட்டெறிக.

இது உடல் மாசு எரித்தல் (பூத தோடதகனம்) எனப்படும்.

**1.1.5.** அடுத்து தலை உச்சியில் இருந்து கால்வரை மலர்களால் தடவி,

"ஓம் என் உடலெலாம் விரிய எற்புத்துளை தொறும்
அமுத தாரைகள் ஏற்றி அள்ளூறும் ஆக்கை அமைத்தனன் போற்றி"

என்று ஓதி மலர்களை தம் உடல்மீது சொரிந்து கொள்க. இது அமுதாடல் (அமுதாபிடேகம்) எனப்படும்.

**1.1.6.** அடுத்து மலர்களை எடுத்து இருதயத்தில் வைத்து,

"ஓம் நலம் புகுந்து என்னொடு நாதனை நாட
மனம் புகுந்து என்னுயிர் மன்னுக போற்றி"

என்று ஓதி அமுதாக்கப்பட்ட உடலில் தூய்மை செய்யப்பட்ட ஆன்மாவை நிலை நிறுத்துக. இது உயிர் பதித்தல் (சீவத்தாபனம்).

**1.1.2.** முதல் **1.1.6** வரை உடல் தூய்மை (பூதசுத்தி) எனப்படும்.

**1.2.0.** மூன்று முறை கையைத்தட்டி 'ஓம் இறைதிரு கருவியால் ஏகுக' என்றும் எல்லாத் திசைகளிலும் விரலால் சொடுக்கி 'ஓம் இறைதிரு கருவியால் கடிதேகுக' என்றும் தீயசத்திகளைத் துரத்துக. பின்னர் சுட்டு விரல் மட்டும் நிமிர்த்தி மேலும் கீழும், பக்கங்களிலும் சுற்றிக் காட்டி, 'ஓம் இறைதிரு வடிவே சூழ்ந்து காக்க' என்று ஓதுக. 'ஓம் சிவாமுதம் பொழிக' என்று தேனு முத்திரை காட்டுக. தேனுமுத்திரை காட்ட இயலாதவர்கள் சுற்றிலும் மலர்களைச் சொரிக.

**1.3.0.** இனி அகவேள்வி செய்க. இடுப்புப் பாகத்தில் முக்கோண வடிவில் ஒரு குண்டம் இருப்பதாகப் பாவித்து, அதில் குண்டலியாகிய நெருப்பை இட்டு வேள்வி ஆற்றியதாகப் பாவித்து, உள்ளங்கையில் மலர்களை எடுத்து மூடி நாபியில் ஒற்றிவைத்துக் கொண்டு 'ஓம் சிவாய நம' என்று பதினோரு முறை ஓதி தன்மேல் மலர்களைத் தூவிக் கொள்க.

**1.4.0.** இனி, அகத்திலிருந்து புறத்தே வழிபாடு செய்வதற்கு ஏற்ப கரத்தை சிவமாகத் திகழச் செய்தல் வேண்டும்.

'ஓம் சிவாய நம' என்று ஓதி வலது உள்ளங்கையில் இடதுகைக் கட்டை விரலால் சந்தனம், பூ, மஞ்சளரிசி வைத்து தடவுக. மற்ற கைக்கும் இதே சடங்கை ஆற்றுக. பின்னர் இருகரங்களையும் கூப்பி 'ஓம் சிவாய நம' என்று ஓதுக. இது சிவக்கரம் செறிதல் (சிவஹஸ்தம்) எனப்படும்.

**1.5.0.** இனி, பஞ்சபாத்திரத்தில் நீரை விட்டு அதை உள்ளங்கையால் மூடி 'ஓம் சிவாய நம' என்று ஏழுமுறை ஓதுக. அதில் அட்சதை, சந்தனம், அருகம்புல் நுனிகள் ஆகியவற்றை இட்டு மீண்டும் ஏழு முறை ஓம் சிவாய நம' என்று ஓதுக. இந்த அருள் நீரை எடுத்து எல்லாப் பூசைப் பொருட்களிலும் தன் மேலும் "ஓம் இறை திருகருவியால் எல்லாக் குற்றங்களும் கடிதேகுக" என்று ஓதித் தெளிக்க. இது பொருள் தூய்மை (திரவிய சுத்தி) எனப்படும்.

**1.6.0.** இனி, ஓம் சிவய நம; ஓம் சிவாய நம; ஓம் சிவாஅய நம" என மூன்று வகையாக மூலமந்திரத்தை ஓதுக. இது மந்திரத் தூய்மை (மந்திர சுத்தி). எனப்படும்.

**1.1.0.** முதல் **1.6.0.** வரை பூசைக்கு முன்னாக செய்ய வேண்டிய ஐவகைத் தூய்மைகளான ஆன்மத்தூய்மை, உடல் தூய்மை, இடத்தூய்மை, பொருள் தூய்மை, மந்திரத் தூய்மை ஆகியவை நிறைவேறின.

**2.1.0** 'ஓம்' என்று ஏற்றி இறக்கி மூன்று முறை உச்சரிக்க. பின்னர்,

"எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வலான்றனையே ஏத்து"

என்று இரண்டு முறை ஓதுக. பின்னர், தலையில் குட்டிக் கொண்டு,

"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்-உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை"

என்று ஓதுக.

'ஓம் பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி' என்று ஓதி பஞ்ச பாத்திரத்தில் இருந்து நீரை எடுத்துக் கையலம்பி பூமியில் விடுக.

"ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் மனவுருவை ஒப்படைக்கின்றேன்"

"ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் அறிவுருவை ஒப்படைக்கின்றேன்"

"ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் சிவவுருவை ஒப்படைக்கின்றேன்"

என்று மூன்று முறை உள்ளங்கையில் பஞ்சபாத்திரத்திலிருந்து உருத்திரிணி எனப்படும் தினை நீர்க் கரண்டியால் நீரை விட்டுப் பருகி ஓதவும். இதனால் இறைவனுக்கு உடல், பொருள் ஆவி மூன்றும் ஒப்படைக்கப்படுவது காண்க. இப்படி ஒப்படைப்பில்லாத பூசை வழிபடும் இறைவனைச் சென்றடையாது.

இனி, திருநீற்றை எடுத்து இடது உள்ளங் கையில் வைத்து வலது உள்ளங்கையால் மூடி 'ஓம் சிவாய நம' என்று பதினோரு முறை ஓதி நீர் விட்டுக் குழைத்து நெற்றி, தோளிரண்டு, கைமூட்டிரண்டு, மணிக்கட்டிரண்டு, மார்பு, நாபி, கால் மூட்டிரண்டு ஆகிய இடங்களில் அணிந்து கொள்க.

"ஓம் சாற்றிய மூல மந்திரத் தால்உரு
நீற்றுக் கோடியில் நிமிர்த்தினன் போற்றி"

என்று ஓதி கை கூப்புக.

**சங்கல்பம்:**

மணங்கமழ் மறைத்தமிழ் உரைத்து உளர்
உருகி வீடுபேற்றடைந்த நம்முன்னோர்
வழிபாட்டு பூசை இயற்றுவன் போற்றி
காலமும் இடமும் கருதிச் செய்தேன்
ஞான நலமெலாம் நல்குக போற்றி.

2.2.0. அடுத்து மணி வழிபாடு செய்க.

"ஓம் என்னுள் ஒலிக்கும் பதின்ஒலி அவற்றை
மன்னி ஒலிக்கும் மணியே போற்றி"

என்று ஓதி மணியின் மீது உள்ள நந்தியின் மீது மலரிடுக.

2.3.0. இனி, உயிர்வளி நிறுத்தல் (பிராணாயாமம்) என்பதைச் செய்க.

அதாவது வலதுகை நடு விரலைக் கட்டை விரலைத் தொடும்படி மடித்து கொள்க. கட்டை விரலால் மூக்கின் வலப்பாகத்தை அழுத்தி மூடுக. பின்னர் இடப்பாக தொளை வழியாக மூச்சினை உள்ளே இழுத்து மோதிர விரலால் இடப்பாகத் தொளையை மூடி உடனே கட்டைவிரலை எடுத்து வலது தொளை வழியாக வேகமாக விடுக. விடும்போது, ஓம் இறைதிரு கருவியால் கடிதேகுக என்று ஓதுக. இதே போன்று வலப்பாகத்தில் மூச்சை இழுத்து இடப்பாக வழியாக விடுக. விடும் போது மேற்படி மந்திரத்தை ஓதுக. இதனால் மூச்சு தூய்மை ஆகிறது.

பின்னர் முன்போல் வலது பாக மூக்கினைக் கட்டை விரலால் அழுத்தி இடத்தொளை வழியாக முடிந்த மட்டும் மூச்சை இழுத்து உள்ளே மூச்சை நிறுத்துக. அந்நிலையில் பதினொரு முறை 'ஓம் சிவாய நம' என்று மனத்தால் ஓதுக. உள்ளே நிறுத்தப்பட்ட அந்த மூச்சு குண்டலி ஆற்றலை தூண்டி எழுப்பியதாக ஆகும்.

பின்னர் மூச்சினை வலப்பாக நாசி வழியாக விடுக. இதேபோன்று வலப்பாக நாசி வழியாக மூச்சை உள்ளே இழுத்து நிறுத்தி இடப்பாக நாசி வழியாக விடுக. நிறுத்தும்போது 'ஓம் சிவாய நம' என்று மனத்தால் பதினொருமுறை ஓதுக. இதுவே உயிர்வளி நிறுத்தல் ஆகும்.

2.4.0. அடுத்து மெய்யொன்றல் (சகளீகரணம்) என்பதைச் செய்க. கையில் மலர்களை எடுத்து தலைமீது வைத்து

"ஓம் முடிமுதல் அடிவரை என்னுடல் மேவி
கடிதில் கலந்தருள் அம்பிகை போற்றி"

என்று ஓதி உடலெலாம் மலர்தூவிக் கொள்க.

**சிவபெருமானை எழுந்தருளச் செய்தல்:**

ஒரு குத்துவிளக்கு அல்லது பெரிய அகலில் விளக்கேற்ற வரும் பாடலைப் பாடுக

விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே

-திருமந்திரம்

பின் வரும் பாடலைப்பாடி கைகளில் பூக்கொண்டு விளக்கு முன்பாகப் போட்டு சிவபெருமானை எழுந்தருளச் செய்யவும்.

சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி அம்மான்
அவன் எனை ஆட்கொண்டு அளித்திடுமாகில் அவன்தனை யான்
பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாள் அழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழியான் என்று எதிர்ப்படுமே

– அப்பர்

பிறகு இறைவனுக்கு மூவுபசாரம் மற்றும் தூபம், தீபம், அமுதூட்டல் செய்து கொண்டு கற்பூர ஒளிக்காட்ட.

**மூவுபசாரங்கள்:**

எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவடிகளை விளக்கி வணங்குகிறோம்

எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவாய் விளக்கி வணங்குகிறோம்

எல்லாம் வல்ல சிவபெருமானின் திருமுடி விளக்கி வணங்குகிறோம்.

**தூபம்:**

**3.1.0.** ''ஓம் சால உயர்ந்த சாம்பிராணி

ஏலப்புகை சூழ்ந்து ஏத்தினன் போற்றி என்று ஓதி சாம்பிராணி புகை, ஊதுவத்தி புகை ஆகிய நறும்புகை காட்டுக.

**தீபம்:**

**3.2.0.** ''ஓம் உய்யும் வகைதந் தருளிட ஒருதிரி

நெய்யிடு தீபம் நேர்ந்தனன் போற்றி'' என்று ஒற்றைச் சுடர் காட்டுக.

**அமுதூட்டல்**

**3.3.0.** ''ஓம் அப்பம் மோதகம் அமுதுபல வகைகள்

இப்பொழு திங்கே படைத்தனன் போற்றி

வாழை மாபலா மணிதிகழ் மாதுளை

ஏழை அளித்தேன் ஏற்க போற்றி''

என்று ஓதி அமுது படைக்க.

"பெருங்கற்பூர தீபமெடுத்தேன் திருமங்கலம் தந்தருள்க போற்றி" என்று கற்பூர ஒளி காட்டுக.

**வீடுபேற்று அடைந்த முன்னோர்களை ஐக்கியப்படுத்தல்:**

பல சிற்றகல்களை எடுத்துக் கொண்டு அவற்றைத் தயார் நிலையில் குத்துவிளக்கு அல்லது பெரிய அகலைச் சுற்றி ஒரு அலங்காரமாக அமைக்கவும். சுற்றி அழகு ததும்பும் கோலங்களை போடவும். முதலில் அகல் ஒன்றை எடுத்து,

**சிவமே பொருளென்று தேற்றி – என்னைச்**
**சிவவெளிக்கேறும் சிகரத்தில் ஏற்றிச்**
**சிவமாக்கிக் கொண்டது பாரீர் – திருச்**
**சிற்றம்பலத்தே திருநட ஜோதி**

**ஜோதியுள் ஜோதியுள் ஜோதி – சுத்த**
**ஜோதி சிவஜோதி ஜோதியுள் ஜோதி**
**ஜோதியுள் ஜோதியுள் ஜோதி**

என்றுப் பாடலைப் பாடி பெருமான் எழுந்தருளிய விளக்கில் ஏற்றவும் இதைப் போன்றே அனைத்து அகல்விளக்குகளிலும் ஒளியை ஏற்றி அவ்வவ் இடங்களில் வைக்கவும். பூக்களைக் கையில் எடுத்துக் கொண்டு ஒவ்வொரு அகல்முன்பாக சிறிது பூக்களை **சிவனருள் பெற்ற முன்னோர்களே எழுந்தருள்க** என்று சொல்லிக் கொண்டே போடவும்.

பிறகு ஒட்டு மொத்தமாக எழுந்தருளிய முன்னோர்க்கு மூவுபசாரம் செய்க.

**மூவுபசாரங்கள்:**

எல்லாம் வல்ல **சிறந்த** முன்னோர்களின் திருவடிகளை விளக்கி வணங்குகிறோம்

எல்லாம் வல்ல **சிறந்த** முன்னோர்களின் திருவாய் விளக்கி வணங்குகிறோம்

எல்லாம் வல்ல **சிறந்த** முன்னோர்களின் திருமுடி விளக்கி வணங்குகிறோம்.

தொடர்ந்து தூபம், தீப ஒளிகாட்டுக. பின் அமுதூட்டல் செய்க (படைக்க) சிவபுராணம் ஓதி நிறைவு செய்துகொள்க.

# சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன், அநேகன், இறைவன், அடி வாழ்க!
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க!
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய் கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன் தன் பூம் கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசன் அடி போற்றி! எந்தை அடி போற்றி!
தேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி!
சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி!
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!
சிவன், அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்,
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி,
சிந்தை மகிழ, சிவபுராணம் தன்னை,
முந்தை வினை முழுதும் ஓய, உரைப்பன் யான்:
கண்ணுதலான், தன் கருணைக் கண் காட்ட, வந்து எய்தி,
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி;
விண் நிறைந்து, மண் நிறைந்து, மிக்காய், விளங்கு ஒளியாய்!
எண் இறந்து, எல்லை இலாதானே! நின் பெரும் சீர்,

பொல்லா வினையேன், புகழும் ஆறு ஒன்று அறியேன்;
புல் ஆகி, பூடு ஆய், புழு ஆய், மரம் ஆகி,
பல் விருகம் ஆகி, பறவை ஆய், பாம்பு ஆகி,
கல் ஆய், மனிதர் ஆய், பேய் ஆய், கணங்கள் ஆய்,
வல் அசுரர் ஆகி, முனிவர் ஆய், தேவர் ஆய்,
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்,
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்; எம்பெருமான்!
மெய்யே, உன் பொன் அடிகள் கண்டு, இன்று வீடு உற்றேன்;
'உய்ய, என் உள்ளத்துள், ஓங்காரம் ஆய் நின்ற
மெய்யா! விமலா! விடைப் பாகா! வேதங்கள்
"ஐயா" என, ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற, நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்! இயமானன் ஆம் விமலா!
பொய் ஆயின எல்லாம் போய் அகல, வந்தருளி,
மெய்ஞ்ஞானம் ஆகி, மிளிர்கின்ற மெய்ச் சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே!
ஆக்கம், அளவு, இறுதி, இல்லாய்! அனைத்து உலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்;
நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நணியானே!
மாற்றம், மனம், கழிய நின்ற மறையோனே!
கறந்த பால், கன்னலொடு, நெய் கலந்தால் போலச்
சிறந்து, அடியார் சிந்தனையுள் தேன் ஊறிநின்று,
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய், எம்பெருமான்! வல்வினையேன் தன்னை மறைந்திட
மூடிய மாய இருளை,
அறம், பாவம், என்னும் அரும் கயிற்றால் கட்டி,
புறம் தோல் போர்த்து, எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்க, புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,
விலங்கு மனத்தால், விமலா! உனக்குக்
கலந்த அன்பு ஆகி, கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி,
நிலம் தன் மேல் வந்தருளி, நீள் கழல்கள் காஅட்டி,
நாயின் கடையாய்க் கிடந்த அடியேற்கு,
தாயின் சிறந்த தயா ஆன தத்துவனே!
மாசு அற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே! தேன் ஆர் அமுதே! சிவபுரனே!
பாசம் ஆம் பற்று அறுத்து, பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து, நெஞ்சில் வஞ்சம் கெட,
பேராது நின்ற பெரும் கருணைப் பேர் ஆறே!
ஆரா அமுதே! அளவு இலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி, என் ஆர் உயிர் ஆய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!
அன்பருக்கு அன்பனே! யாவையும் ஆய், அல்லையும் ஆம்
சோதியனே! துன் இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம், நடு, ஆகி, அல்லானே!
ஈர்த்து என்னை, ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தின் நோக்கு
அரிய நோக்கே! நுணுக்கு அரிய நுண் உணர்வே!
போக்கும், வரவும், புணர்வும், இலாப் புண்ணியனே!
காக்கும் எம் காவலனே! காண்பு அரிய பேர் ஒளியே!
ஆற்று இன்ப வெள்ளமே! அத்தா! மிக்காய்! நின்ற
தோற்றச் சுடர் ஒளி ஆய், சொல்லாத நுண் உணர்வு ஆய்,
மாற்றம் ஆம் வையகத்தின் வெவ்வேறே வந்து, அறிவு ஆம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்று ஆன உண் ஆர் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப
ஆற்றேன்; "எம் ஐயா," "அரனே! ஓ!" என்று என்று
போற்றி, புகழ்ந்திருந்து, பொய் கெட்டு, மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து, வினைப் பிறவி சாராமே,
கள்ளப் புலக் குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே! ஓ!' என்று,
சொல்லற்கு அரியானைச் சொல்லி, திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக் கீழ்,
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

நிறைவாக நமது வேண்டுகோளாக **எண் மாமலர் போற்றி**யை சொல்லி மொத்தமாகப் பூபோடவும்.

**ஓம் கொல்லா நோன்பருளும் கூத்தா போற்றி**
**ஓம் ஐந்தடக்கும் ஆற்றல் அருள்வோய் போற்றி**
**ஓம் பொறையுடைமை கைக்கொளச்செய் புலமையோய் போற்றி**
**ஓம் அருள்வழியே நடப்பிக்கும் அன்பே போற்றி**
**ஓம் அறிவுருவாய் ஆக்குவிக்கும் அண்ணால் போற்றி**
**ஓம் வாய்மை நெறி நிற்பிக்கும் வள்ளால் போற்றி**
**ஓம் தவநெறியே சார்விக்கும் தக்கோய் போற்றி**
**ஓம் அன்புநெறி ஒழுகச்செய் இன்பே போற்றி**

இறுதியாக **பெரும் பேரொளி**யைக்காட்டுக.

**'அறிவொடு வழிபடும் அடியவர் குழுமிய**
**செறிதரு கலசையில் வருதரு சிவனே'**

– சிவஞான முனிவர்.

ஓம் பெருங்கற்பூர தீபம் எடுத்தேன்
திருமங் கலம்தந் தருளுக போற்றி

சிறிது திருநீற்றை எடுத்து ஓங்காரமாக சாற்றிப் பின் அதனை திருநீற்றுக் கோவிலில் சேர்த்துக் கொள்க. அனைவரும் வீழ்ந்து வணங்கி பின் முன்னோர்களின் ஆசி பெற்று திருநீறணிந்து சிறப்படையவும்.



# தெய்வமுரசு

## ஆன்மீக மாத இதழ்

- தமிழ் உணர்வு பொங்க வரும் தனித்தெய்வ மாத இதழ்!
- ஆன்மீகமும், அருந்தமிழும் கலந்த அற்புதமான மாத இதழ்!
- தமிழின் மாண்புகளும் திருமுறை பெருமைகளும் இணைந்து உருக்கி வார்த்த வேலாக புறப்படுகிறது இந்த மாத இதழ்!
- சுற்றி நில்லாதே போ இருளே! துள்ளி வருகுது வேல்!
- சிக்கல் நிறைந்த கேள்விகளுக்கெல்லாம் தக்க பதில்களைத் தாங்கி சுந்தரத்தமிழில் சுடச்சுட வரும் கேள்வி – பதில் பகுதி!
- தமிழ் அறிஞர்களின் கட்டுரைகளும், சுவையான பேட்டிகளும் நிறைந்த இதழ்!
- உண்மை பக்தி நெறியை உலகில் நிலைநாட்ட வரும் ஒரே இதழ்!
- நாடறிந்த திருமந்திரத் தமிழ்மாமணி, செந்தமிழ் வேள்விச்சதுரர் **மு.பெ.சத்தியவேல் முருகனார்** ஆசிரியராக இருந்து அரிய தலையங்கங்களை எழுதுகிறார்.
- நடைமுறை காலத்தில் விடைமுறை கிடைக்காத அவ்வப்போதைய ஆன்மீக பிரச்சனைகளை அலசி ஆராய்கின்ற ஒரே சிறப்பு இதழ்!

| | 1 ஆண்டு | 5 ஆண்டு | புரவலர் | ஆர்வலர் |
|---|---|---|---|---|
| **சந்தா** | ரூ.100.00 | ரூ.500.00 | ரூ.1000.00 | ரூ.10,000.00 |

**விளம்பரம்:**

பின் அட்டை வெளிப்பக்கம் - ரூ. 3000.

மேலட்டை உள்பக்கம் - ரூ. 2500. பின் அட்டை உள்பக்கம் - ரூ. 2000.

முழுப்பக்கம் உள்ளே - ரூ. 1000. அரைப்பக்கம் உள்ளே - ரூ. 600.

**உங்களது சந்தாவினைப் பணவிடை(மணியார்டர்) மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்**

**தெய்வமுரசு**

9/1, மாஞ்சோலை முதல் தெரு
கலைமகள் நகர், ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை-600032.

# தெய்வமுரசு

ஆன்மீக மாத இதழ்

## சந்தா படிவம்

பெயர் : ______________________________

முகவரி : ______________________________

______________________________

______________________________

______________________________

தொலைபேசி : ______________________________

கைபேசி : ______________________________

மின்னஞ்சல் : ______________________________

| ஆண்டு : | ஒன்று | ஐந்து | பத்து | ஆயுள்(ஆர்வலர்) |
|---|---|---|---|---|
| இதழ் சந்தா கட்டணம் : | ☐ ரூ.100 | ☐ ரூ.500 | ☐ ரூ.1000 | ☐ ரூ.10,000 |

### பணம் செலுத்தும் முறை:

☞ **காசோலை** :– DHEIVA MURASU என்ற பெயரில்.

☞ **பணவிடைத் தாள்** :– பணவிடைத்தாள்(M.O) படிவத்தில் தகவலுக்கான இடத்தில் உங்கள் முழு முகவரியை மறக்காமல் எழுதி, சந்தாவை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

## தெய்வமுரசு

**9/1, மாஞ்சோலை முதல் தெரு,**
**கலைமகள் நகர், ஈக்காட்டுத்தாங்கல்**
**சென்னை – 600 032**

Visit www.dheivathamizh.org